# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

## ஆணை நாள். 06.10.2026

## முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் : SA-2856/A/2024**

திரு. A.பெரியசாமி .. மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
எடப்பாடி வட்டம்,
சேலம் மாவட்டம் – 637 101. .. பொது அதிகார அமைப்பு

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 06.10.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. A.பெரியசாமி அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.வே. மகேந்திரன், பொதுத் தகவல் அலுவலர் /தலைமையிடத்து துணை வட்டாட்சியர், எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 21.09.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், வெள்ளாளபுரம் கிராமத்தில் அமைந்துள்ள வருவாய் கிராமம் அலுவலகம் எத்தனை கு கிராமங்களை இணைத்து வருவாய் கிராம அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது வெள்ளாளபுரம் கிராமத்தில் வருவாய் கிராம அலுவலகம் மூலம் குக் கிராமங்களை இணைத்து அந்தந்த கிராமத்தின் எல்லை கற்கள் எந்த இடத்தில் அமையப்பட்டுள்ளது தற்போது எந்த ஆண்டு பராமரிக்கப்பட்டது மற்றும் 01.07.2017 முதல் 01.09.2023 வரை எத்தனை பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது போன்ற விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரி 9 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலர் 05.10.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் சட்டப்பிரிவு 6(3)–ன் கீழ் மனுவை பொது தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், எடப்பாடி வட்டம் அவர்களுக்கு மாற்றம் செய்து மனுதாரருக்கு தகவல் தெரிவித்துள்ளார். பொது தகவல் அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர் 06.11.2023 நாளிட்ட பிரிவு 19(1)–ன்கீழ் முதல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால், மனுதாரர், 05.03.2024 நாளிட்ட பிரிவு 19(3)–ன் கீழ் இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 06.10.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களை 30.09.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை மனுதாரருக்கும், ஆணையத்திற்கும் நேரில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் தான் கோரியுள்ள தகவல்ளை உரிய காலத்திற்குள் வழங்கவில்லை எனவும், ஆணையத்தின் அழைப்பாணையை பெற்ற பிறகே, தனக்கு தகவல்களை வழங்கியுள்ளதாகவும், இதனால் தான் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், சற்றேரக்குறைய 3 ஆண்டு காலமாக முழுமையான தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பின் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1) மற்றும் 20(2)இன் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணையத்தை கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் பிரிவு 6(1) இன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு சற்றேரக்குறைய 3 ஆண்டுகள் கடந்த நிலையில், ஆணையத்தின் அழைப்பாணைக்குப் பிறகே மனுதாரர் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான தகவல்கள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும், ஆணையம் அத்தகவல்களை பரிசீலனை செய்ததில், அத்தகவல்கள் முழுமையான தகவல்கள் என பதிவு செய்கின்றது. மேலும், மனுதாரர் தனது 21.09.2023 நாளிட்ட மனுவில் குறிப்பிட்டு கோரியிருந்தும், எளிதாக தகவல் தரக்கூடிய தகவலை மனுதாரருக்கு தகவல் வழங்காமல் அலைக்களித்துள்ளது தெரிய வருகிறது. அவ்வாறு மெத்தனபோக்குடன் செயல்பட்ட அப்பொது அதிகார அமைப்பின் பொதுத் தகவல் அலுவலர்களை இவ்வாணையம் வன்மையாகக் கண்டித்து, எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் பின்வருமாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:–

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005இன் படி உரிய காலத்திற்குள் தகவல் வழங்காமல் சற்றேரக்குறைய 3 ஆண்டுகளாக தகவல் வழங்காமல் இருந்த எடப்பாடி வட்டாட்சியரின் பொது அதிகார அமைப்பானது, வெளிப்படைத் தன்மையுடன் செயல்படாமல், ஊழலற்ற இச்சட்டத்தை செயல்படுத்தாமல், அரசு பணியில் அலட்சியமாக செயல்பட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த மறந்து எவ்விதமான தகவல்களையும் வழங்காமல், தகவலை அளிக்கக் கூடாது என்ற தீய எண்ணத்தில் மனுதாரரை அலைக்களிக்கும் நோக்கில் பொது***

அதிகார அமைப்பு செயல்பட்டுள்ளது தெரிய வருகிறது. ஆணையம் அப்பொது அதிகார அமைப்பின் செயலை வன்மையாகக் கண்டிக்கிறது.

- மனுதாரருக்கு உரிய காலகாலத்திற்குள் தகவல் வழங்கமால் இருந்த திருமதி.ப்பி. சாஜிதா பேகம், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் ரூ25,000/– தண்டம் ஏன் விதிக்கக்கூடாது மற்றும் பிரிவு 20(2)இன் கீழ் ஏன் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு 28.10.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மேற்படி ஆணையை அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்களுக்கு சார்வு செய்ய உத்தரவிடப்படுகிறது.

- மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 அனுமதித்திருக்கும் 30 நாட்களில் பொதுத் தகவல் அலுவலர், தகவல் தர இயலாத சூழ்நிலைக்கு தகுந்த காரண விளக்கங்கள் (Violation of the Act) இவ்வாணையத்தின் விசாரணையில் தெரிவிக்காத காரணத்தாலும்

- பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காமல் இருப்பதற்கு ஏற்புடைய அல்லது நியாயமற்ற தாமதத்தை (Unreasonable delay) இவ்வாணையத்தின் விசாரணையில் நிருபிக்காத காரணத்தால்

- பொதுத் தகவல் அலுவலரால் ஏற்படுத்தப்பட்ட தேவையற்ற தொந்தரவு மற்றும் தேவையற்ற சிரமத்தினால் (Harrasment or Unnecessary inconvenience caused) மனுதாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் மற்றும் உடல் பாதிப்பினால் தன்னுடைய குடும்பம் மற்றும் தனது வருமாணம் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தாலும்

- மேலும் மனுதாரர் தனக்கு உரிய காலத்திற்குள் வழங்காமல் தனக்கு ஏற்பட்ட மனஉளைச்சலை ஈடுசெய்யும்பொருட்டு பொது அதிகார அமைப்பு மீது நடவடிக்கை மேற்கொள்ளவும், உரிய நஷ்டஈடு வழங்க வேண்டியும் ஆணையத்தின் விசாரணையில் தெரிவித்தன் அடிப்படையில் மனுதாரரின் கோரிக்கையினை ஆணையம் ஏற்று, மேற்படி தகவல்கள் வழங்காததால் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள மனஉளைச்சலை ஈடுசெய்யும் பொருட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(8)(b)–ன் கீழ் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கவும், மேற்படி தொகையினை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஆதாரத்துடன் கூடிய அறிக்கையின் நகலினை இவ்வாணையத்திற்கு 28.10.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு, தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்</u>** <u>SA-2856-A-2024</u>

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**எடப்பாடி வட்டம்,**
**சேலம் மாவட்டம் – 637 101**

**<u>மனுதாரர்:</u>**
**திரு. A.பெரியசாமி**
**1/585, எட்டிக்குட்டை மேடு,**
**கச்சுப்பள்ளி கிராமம்,**
**எடப்பாடி வட்டம்,**
**சேலம் – 637102**

Copy to File

Je/PA 06.10.2026